ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,495 – 1965 සැප්තැම්බර් 3 වැනි සිකුරාදා – 1965.9.3

14,495 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 455 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

எல்.டி.பீ 28/57.

### 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கைச் சொத்துகள் அல்லது வக்புகள் சட்டம்

1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கைச்சொத்துகள் அல்லது வக்புகள் சட்டத்தின் 54 ம் பிரிவின்கீழ், பள்ளிவாசல்கள் முஸ்லிம் தரும நம்பிக்கைச் சொத்துகள் அல்லது வக்புகள் சபையின் ஆலோசனையுடன், உள்நாட்டலுவல்கள் அமைச்சராலாக்கப்பட்டு செனெற்றினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதி.

டபிள்யூ. தஹநாயக்கா,
உள்நாட்டலுவல் அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஓகஸ்ற் மீ 23 ந் உ.

#### ஒழுங்குவிதி

1959 ஜனவரி 16 ம் தேதிய 11,640 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டின் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கைச் சொத்துகள் அல்லது வக்புகள் ஒழுங்கு விதிகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன :—

(1) 11 ம் ஒழுங்குவிதியில்

(அ) அதன் (2) ம் பந்திக்குள்ள நிபந்தனையில் " அவர் செய்யும் பிரயாணத்துக்கு " என்பது முதல் " பெற உரிமையுடையவராயிருப்பர் " என்பது வரையுள்ள சொற்கள் எல்லாவற்றுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"அவர்,

(அ) முதல் வகுப்பு புகையிரதப் பிரயாணச் சீட்டுக்கான ஆணைப்பத்திரம், அல்லது

(ஆ) அவ் அங்கத்தவர் அத்தகைய பிரயாணத்தினை மோட்டார்வண்டி மூலம் செய்திருக்குமிடத்து முதல் வகுப்புப் புகையிரதப் பிரயாணத்துக்குரிய செல்வுக்குச் சமமான ஈடு செய்யும் தொகைக்கு

உரிமையுடையவராவார்".

(ஆ) அதன்கண் 2 ம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்த்தல் மூலமும் :—

" (3) கொமிஷனர் தவிர்ந்த சபை அங்கத்தவர் ஒவ்வொருவரும், சபையின் முறைப்படி அமைக்கப்பட்ட கூட்டமொன்றின் அங்கத்தவர் என்ற தன்மையில் பரிசோதனை செய்யும் கடமைகளுக்கெனச் செய்யும் பிரயாணங்கள் சம்பந்தமாக முதல் வகுப்புப் புகையிரதப் பிரயாணச் சீட்டுக்கான ஆணைப்பத்திரம் ஒன்றுக்கு உரிமையுடையவராவர்;

ஆயினும் புகையிரதசேவை இல்லாதவிடத்து, புகையிரத மூலம் பிரயாணம் செய்வதனைக் காட்டிலும் தெரு மார்க்கம் செய்வதனை பரிசோதனைக் கடமைகள் அவசியமாக்குமிடத்து அத்தகைய பிரயாணத்தைச் செய்யும் அங்கத்தவர் எவரும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளில் 1561 ம் ஒழுங்குவிதிக்கமைய இதற்குள்ள இ என்னும் அட்டவணையிற்தரப்பட்டுள்ள விகிதத்தில் கணிக்கப்படும் பிரயாணச் செலவுகளுக்குரிமையுடையவராயிருப்பர்."

(2) அதற்குள்ள ஆ என்னும் அட்டவணையினை உடனடுத்துப் பின்வரும் இ என்னும் அட்டவணையைச் சேர்த்தல் மூலமும்

" இ " அட்டவணை

| வகுப்பு | மைல் ஒன்றுக்கு சதம் |
|---|---|
| 1. 14 அந்தருக்கு மேற்பட்ட பாரமுள்ள தனிப்பட்டார் மோட்டார் வாகனத்துக்கு .. | 40 |
| 2. 12 அந்தருக்கு மேற்பட்ட பாரமுள்ள ஆனால் 14 அந்தருக்கு மேற்படாத் தனிப்பட்டார் மோட்டார் வாகனத்துக்கு .. .. | 3) |
| 3. 12 அந்தர் அல்லது அதற்குக் குறைந்த பாரமுள்ள தனிப்பட்டார் மோட்டார் வாகனத்துக்கு .. | 25" |

## இணக்கச் சபைகள் சட்டம்

3 (2) ம் பிரிவின் கீழான அறிவித்தல்

1963 ம் ஆண்டின் 12 ம் இலக்கச் சட்டத்தினுற்றிருத்தப்பட்டபடியான, 1958 ம் ஆண்டின் 10 ம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 ம் பிரிவின் (2) ம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, நீதியமைச்சரான அலக்சாண்டர் பெயாலி விஜேமானன்ன ஆகிய நான், இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள இடப்பரப்பொவ்வொன்றுக்கும் இணக்கு வோர்களைக் கொண்ட குழுவொன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப் படுகிறதென்றும், அத்தகைய இடப்பரப்பொவ்வொன்றினதும் இணக்கு வோர் குழுவுக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆட்கள் சம்பந்தமான அப்பிரிவின் (3) ம் உட்பிரிவின் பிரகாரமான ஆலோசனைகள் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் தேதியில் அல்லது அதற்கு முன் எழுத்தில் எனக்கு அனுப்பி வைக்கப்படலாமெனவும் இதனைக்கொண்டு அறிவிக்கின்றேன்.

ஏ. எவ். விஜேமானன்ன,
நீதியமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 27.8.1965.

### அட்டவணை

1. அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு கிராமப்பகுதி.
2. அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் கிராமப்பகுதி.
3. அம்பாறை மாவட்டத்திலுள்ள பொதுவில் கிராமப்பகுதி.
4. அம்பாறை மாவட்டத்திலுள்ள பாணம கிராமப்பகுதி.
5. அம்பாறை மாவட்டத்திலுள்ள மெத பலாத கிராமப்பகுதி.
6. அம்பாறை மாவட்டத்திலுள்ள உடபலாத கிராமப்பகுதி.
7. அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை கிழக்கு கிராமப்பகுதி.
8. அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை மேற்கு கிராமப்பகுதி.
9. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏருவூர் வடக்கு கிராமப்பகுதி.
10. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏருவூர் தெற்கு கிராமப்பகுதி.
11. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளை வடக்கு கிராமப்பகுதி.
12. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி கிராமப்பகுதி.
13. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை கிராமப்பகுதி.
14. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளை தெற்கு கிராமப்பகுதி.
15. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நவகிரி நகர் கிராமப்பகுதி.
16. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏருவூர் மேற்கு கிராமப்பகுதி.
17. மன்னுர் மாவட்டத்திலுள்ள மன்னுர் கிழக்கு கிராமப்பகுதி.
18. மன்னுர் மாவட்டத்திலுள்ள பேசாலை கிராமப்பகுதி.
19. மன்னுர் மாவட்டத்திலுள்ள எருக்கலம்பிட்டி கிராமப்பகுதி.
20. மன்னுர் மாவட்டத்திலுள்ள பெருங்காளிப்பத்து கிராமப்பகுதி.
21. மன்னுர் மாவட்டத்திலுள்ள நானுட்டான் மேற்கு கிராமப்பகுதி.
22. மன்னுர் மாவட்டத்திலுள்ள நானுட்டான் கிழக்கு கிராமப்பகுதி.
23. மன்னுர் மாவட்டத்திலுள்ள வங்காலை கிராமப்பகுதி.
24. மன்னுர் மாவட்டத்திலுள்ள தலைமன்னுர் கிராமப்பகுதி.

9—122.

---

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 54 ம் இல. தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (128 ம் அத்தியாயமாகிய) அச்சட்டத்தின் 59 ம் 105 ம் பிரிவுகளின் பிரகாரம் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் ஆக்கப்பட்டு, அச்சட்டத்தின் 105 ம் பிரிவின்படி செனெற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

எம். எச். மொஹமத்,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஜூலை மீ 30 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1965 ம் ஆண்டின் தொழிற்சாலை (நீராவிக் கொதிகலப் பரிசாரர் தகுதி அத்தாட்சிப்பத்திர) ஒழுங்கு விதிகளென வழங்கப்படலாம்.

2. நீராவிக் கொதிகலங்களைப் பரிசோதனைசெய்து அவைபற்றி அறிக்கையிடுதற்குக் கட்டளைச் சட்டத்தின் 34 (6) ம் பிரிவின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட—

(அ) நீராவிக் கொதிகலப் பரிசாரர் III ம் வகுப்புத் தகுதி அத்தாட்சிப்பத்திரமொன்றைப் பெற்றிருந்தாலன்றி, எவரும், மணியொன்றுக்கு 2,000 றுத்தலுக்கு மேற்படாத நீராவியை உற்பத்திசெய்யும் சக்தியுடைய நீராவிக்கொதிகலமெதையும்,

(ஆ) நீராவிக்கொதிகலப் பரிசாரர் II ம் வகுப்புத் தகுதி அத்தாட்சிப் பத்திரமொன்றைப் பெற்றிருந்தாலன்றி, எவரும் மணியொன்றுக்கு 6,000 றுத்தலுக்கு மேற்படாத நீராவியை உற்பத்தி செய்யும் சக்தியுடைய நீராவிக்கொதிகலமேதையும் ;

(இ) நீராவிக்கொதிகலப் பரிசாரர் I ம் வகுப்புத் தகுதி அத்தாட்சிப் பத்திரமொன்றைப் பெற்றிருந்தாலன்றி, எவரும், மணியொன்றுக்கு 6,000 றுத்தலுக்கு மேற்பட்ட நீராவியை உற்பத்தி செய்யும் சக்தியுடைய நீராவிக்கொதிகலமெதையும்

கண்காணிக்காதவாறு நிச்சயிப்பது ஒவ்வொரு தொழிற்சாலையினது ஆட்சியிலிருப்பவரின் கடமையாதல்வேண்டும்.

3. இதனகத்தேயுள்ள I ம் அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு அவ்வகுப்பின் தேவைகளின் பிரகாரம் தகுதி பெற்றிருக்கும் ஒருவருக் கன்றி, எவ்வகுப்புத் தகுதி அத்தாட்சிப்பத்திரமும் வழங்கப்படலாகாது.

ஆயினும், அந்நோக்கத்திற்கெனப் பிரதான தொழிற்சாலைப் பரிசோத கரால் அனுமதிக்கப்படும் தொழில் நுட்பத்தராதரங்களையுடைய ஒரு வருக்கு அல்லது அந்நோக்கத்திற்கெனப் பிரதான தொழிற்சாலைப் பரிசோதகரால் அனுமதிக்கப்படுவதற்கமைய நீராவிக்கொதிகலங்களை செப்பமாக வைத்திருப்பதில் விசேட பயிற்சிபெற்ற ஒருவருக்கு, அவர் எத்தனை ஆண்டு அனுபவமுடையவராயிருப்பினும் சரி, எவ்வகுப்பிலும் தகுதி அத்தாட்சிப்பத்திரமொன்று வழங்கப்படலாம்.

4. (1) தகுதி அத்தாட்சிப்பத்திரமொவ்வொன்றும்—

(அ) இதனகத்தே II வது அட்டவணையிலுள்ள பத்திரத்தின் பொருளுக்கமைய இருத்தல் வேண்டும் ;

(ஆ) அதனகத்தே குறிக்கப்பட்ட விவரங்களைக்கொண்டதாயிருத்தல் வேண்டும் ;

(இ) மூன்று பிரதிகளில் வழங்கப்படவேண்டும்.

(2) தகுதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலவோலை விண்ணப்பதாருக்கு வழங்கப்படுதல் வேண்டும். இணைப்பிரதி பிரதான தொழிற்சாலைப் பரி சோதகருக்கு வழங்கப்படுதல் வேண்டும். எஞ்சிய பிரதியை அத்தாட்சிப் பத்திரம் வழங்குபவர் வைத்திருத்தல்வேண்டும்.

5. 1896 ம் ஆண்டுச் சரங்க, இயந்திரக்காப்புக் கட்டளைச் சட்டத்தின் 4 ம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் தகுதி அத்தாட்சிப்பத்திரம் ஒவ்வொன்றும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் தேதியி லிருந்து ஆறு மாத காலம்வரை தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டும். அதன்பின்னர், அது நடைமுறையிலிராதொழிதல்வேண்டும்.

6. தகுதி அத்தாட்சிப்பத்திரம் வழங்க அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் அதனை வழங்க மறுக்குமிடத்து, அவ்வண்ணம் மறுத்தற்கான காரணங் களைக்கூறி அவ்வண்ணம் மறுத்த தேதியிலிருந்து 14 நாட்களுக்குள் பிரதான தொழிற்சாலைப் பரிசோதகருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

7. தகுதி அத்தாட்சிப்பத்திரம் வழங்க அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் விண்ணப்பதாரர் ஒருவருக்குத் தகுதி அத்தாட்சிப் பத்திரமொன்றை வழங்க மறுத்தவிடத்து, அவ்வண்ணம் மறுத்த தேதியிலிருந்து ஆறு மாதகாலம் கழிந்தபின்னரன்றி, அவ்விண்ணப்பதாரர் புதிய அத்தாட்சிப் பத்திரமொன்றுக்கு விண்ணப்பித்தலாகாது.

8. தகுதி அத்தாட்சிப்பத்திரமொன்று கோரிச் செய்யப்படும் விண்ணப் பம் யாதும், முந்திய ஆறு மாதகாலத்திற்குள் தகுதி அத்தாட்சிப் பத்திரமொன்று விண்ணப்பதாருக்கு மறுக்கப்படவில்லையென்னும் பிர திக்கினையொன்றுடன் அனுப்பப்படாதவிடத்து ஏற்றுக்கொள்ளப்படலா காது.

### I வது அட்டவணை

III ம் வகுப்பு—கொதிகலப்பரிசாரர் அத்தாட்சிப்பத்திரம்—தராதரங்கள்

1. அவருக்குத் தொதிகலங்கள் பற்றிப் பொது அறிவு இருத்தல் வேண்டும்.

2. மணியொன்றுக்கு 2,000 றுத்தல்வரை நீராவியை உற்பத்தி செய்யும் சக்தியுடைய கொதிகலங்களை இயக்குந்திறன் அவருக்கு இருத் தல் வேண்டும்.

3. நீராவியைத் திறமையாகவும் சிக்கனமாகவும் உற்பத்தி செய்யும் திறன் அவருக்கு இருத்தல்வேண்டும்.

4. பாதுகாப்பு உபாயங்களுட்பட, கொதிகல அடைகள், பொருத்திகள் ஆகியவற்றின் பெயர்களையும் அவற்றின் செயல்களையும் அவற்றை இயக்கும் வகையையும் அவர் அறிந்திருத்தல் வேண்டும்.

5. தீ மூட்டுவோராக அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட கொதிகலப் பரிசாரரொருவரின் உதவியாளராகக் குறைந்தபட்சம் ஓராண்டுகால அனுபவம் அவருக்கு இருத்தல்வேண்டும்.

6. கொதிகலங்களைத் துப்பரவு செய்தல், வெளிப்போக்கிகளைத் துப்பரவு செய்தல், மற்றும் பேணுதல் வேலை ஆகியவற்றை அவர் அறிந்திருத்தல் வேண்டும்.

**II ம் வகுப்பு—கொதிகலப்பரிசாரர் அத்தாட்சிப்பத்திரம்—தராதரங்கள்**

III ம் வகுப்பு கொதிகலப்பரிசாரர் தராதரப்பத்திரத்திற்கென விதிக்கப்பட்டுள்ள தராதரங்களுடன், பின்வரும் தராதரங்களும் அவருக்கு இருத்தல்வேண்டும் :—

(1) மணியொன்றுக்கு 6,000 றுத்தல்வரை நீராவி உற்பத்திசெய்யும் சக்தியுடைய கொதிகலங்களை இயக்குதற்கு அவர் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்.

(2) அவர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகாலம் கொதிகலங்களைக் கண்காணித்த அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

(3) நீர் உட்பாய்ச்சும் கருவிகள் முதலியவற்றை அவர் அன்றாடம் பழுதுபார்க்கும் திறனுடையவராயிருத்தல் வேண்டும்.

**I ம் வகுப்பு—கொதிகலப்பரிசாரர் அத்தாட்சிப்பத்திரம்—தராதரங்கள்**

II ம் வகுப்பு கொதிகலப்பரிசாரர் அத்தாட்சிப்பத்திரத்திற்கென விதிக்கப்பட்டுள்ள தராதரங்களுடன் பின்வரும் தராதரங்களும் அவருக்கு இருத்தல்வேண்டும் :—

(1) மணியொன்றுக்கு 6,000 றுத்தலுக்கு மேற்பட நீராவி உற்பத்தி செய்யும் சக்தியுடைய கொதிகலங்களை இயக்குதற்கு அவர் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்.

(2) அவர் குறைந்தபட்சம் 6 ஆண்டுகாலம் கொதிகலங்களைக் கண்காணித்த அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

**II வது அட்டவணை**

**III/II/I* ம் வகுப்புக் கொதிகலப்பரிசாரர் தகுதி அத்தாட்சிப்பத்திரம்**

இதனடியிற்கண்ட விவரங்களைப் பொருந்திய ———— என்பவர், நான் மிகவும் நன்கறிந்தவரையிலும் நம்பியவரையிலும், கீழே குறிக்கப்பட்ட சக்திகளையுடைய பல்வகை நீராவிக்கொதிகலங்களையும் கண்காணித்தற்கு ஏற்றவரும் தகுதியுடையவருமாவரென்று (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் 34 (6) ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி அதிகாரமளிக்கப்பட்டவரென்ற முறையில், கீழே ஒப்பமிட்டுள்ள ———— ஆகிய நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன் :—

முழுப்பெயர் : ————.

பிறந்த இடம் : ————.

நிரந்தர விலாசம் : ————.

வயது : ————.

எத்தேசத்தவர் ? ————.

ஒப்பம் அல்லது கைப்பெருவிரல் அடையாளம் : ————.

நீராவிக்கொதிகலங்களின் விவரம் : ————.

தேதி : ————.

————
ஒப்பம்.

* பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுக.

9-1

**சம்பளச் சபைச் சட்டம்**

**அறிவித்தல்**

தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த திரு. வீ. கே. வெள்ளையன் தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. எஸ். எம். சுப்பையா என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஓ. வீரசிங்க,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு
மந்திரி காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 21 ந் உ.

9-18

---

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

துவிச்சக்கர வண்டிகளின் டயர்கள், டியூப்புக்கள் விலை சம்பந்தமாக விலைக்கட்டுப்பாட்டதிகாரியினால் (நானாவித பொருட்கள்) ஆக்கப்பட்டு 1965, ஜூலை 9 ந் திகதிய 14,447 ஆம் இலக்க அரசாங்க அதி விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை வர்த்தக, வியாபார அமைச்சர் அங்கீகரித்துள்ளாரென (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (7) ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ரீ. ஈ. ஏ. த பொன்சேக்கா,
நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந் உ.

9-2

---

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

பயிற்சிப் புத்தகங்களின் (எக்சசைஸ் கொப்பி) விலை சம்பந்தமாக, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியினால் (நானாவித பொருட்கள்) ஆக்கப்பட்டு, 1965, ஜூலை 22 ந் திகதிய 14,457 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை வர்த்தக, வியாபார அமைச்சர் அங்கீகரித்துள்ளாரென (173 ம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (7) ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ரீ. ஈ. ஏ. த பொன்சேக்கா,
நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு,
1965, ஆகஸ்ட் 14 ந் திகதி.

9-27

---

**சங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 123)**

1947, செப்டம்பர் 24 ந் திகதியின் 9,773 ஆம் இலக்க அதி விசேட அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தினால் திருத்தியமைக்கப்பெற்ற (123 ம் அத்தியாயமான) சங்கக் கட்டளைச் சட்டத்தின் 3 ம், 4 ம் பிரிவுகளினால் எமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வர்த்தக, வியாபார அமைச்சராகிய மஹப்பிட்டியாகே வெலின் பீற்றர் பீரிஸ் ஆகிய நான் இவ்வறிவித்தல் மூலம் —

1954, ஆகஸ்ட் 13, 1962, மே 25 ந் திகதிகளின் முறையே 10,703, 13,134 இலக்கங்கொண்ட அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களினால், எந்நோக்கத்திற்காக (123 ம் அத்தியாயமான) சங்கக்கட்டளைச் சட்டத்தின் அதிகாரங்களும், அனுகூலங்களும் விரிவாக்கப்பட்டனவோ அதே நோக்கத்திற்காக " வரையறுக்கப்பட்ட அகில இலங்கை காந்திய சேவா சங்கம் " அமைக்கப்பட்டதென அனுமதியளிக்கின்றேன்.

எம். வீ. பீ. பீரிஸ்,
வர்த்தக, வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந் உ.

9-71

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபட்வேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | ... | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | ... | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | ... | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... | 15 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், சுபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை வாழைச்சேனை சுன்சோண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.